# ஜனவரி – 29 – திங்கள்

**தூய பிரான்சிஸ் டி சல்**

**ஆயினும், ஆண்டவரே நீரே என் மாட்சி:திபா. 3:3**

---

## முதல் வாசகம் : 2சாமுவேல் 15:13 –14, 30,16:5 - 13

அப்போது தூதன் ஒருவன் தாவீதிடம் வந்து, ”அப்சலோம் இஸ்ரயேலரின் உள்ளங்களைக் கவர்ந்து கொண்டான் ”என்று கூறினான். தாவீது தம்மோடு எருசலேமிலிருந்த அலுவலர் அனைவரிடமும், ”வாருங்கள் நாம் தப்பியோடுவோம், ஏனெனில் அப்சலோமிற்கு முன்பாக நாம் தப்ப முடியாது. விரைவில் வெளியேறுங்கள். இல்லையேல் அவன் விரைவில் நம்மை மேற்கொண்டு, நமக்குத் தீங்கு விளைவிப்பான் நகரையும் வாள்முனையால் தாக்குவான்” என்றார். தாவீது அழுதுக் கொண்டே ஒலிவமலை ஏறிச்சென்றார். தலையை மூடிக் கொண்டு வெறுங்காலோடு அவர் நடந்தார். அவரோடிருந்த மக்கள் அனைவரும் தன் தலையை மூடிக் கொண்டு அழுதுகொண்டே ஏறிச் சென்றனர். தாவீது பகூரிம் வந்தபோது சவுலின் குடும்பத்தையும் வீட்டையும் சார்ந்த ஒருவன் அவரை எதிர்கொண்டான். அவன் கேராவின் மகனான சிமயி. அவன் பழித்துக் கொண்டே எதிரே வந்தான். அவன் தாவீது மீதும், தாவீது அரசரின் எல்லாப் பணியாளர் மீதும் எல்லா மக்கள் மீதும், அவர்தம் வலமும் இடமும் இருந்த வீரர்கள்மீதும் கல்லெறிந்தான். சிமயி பழித்துக் கூறியது. இரத்த வெறியனே! பரத்தை மகனே! போ! போ!. நீ சிந்திய சவுல் வீட்டாரின் இரத்தப் பழி அனைத்தையும் ஆண்டவர் உன்மீது வரச்செய்துள்ளார். சவுலுக்குப் பதிலாக நீ ஆட்சி செய்தாய் அன்றோ! ஆண்டவர் உன் மகன் அப்சலோமின் கையில் அரசைத் தருவார்! இரத்த வெறியனான நீ உன் தீமையிலேயே அழிவாய்”. அப்போது செருயாவின் மகன் அபிசாய் அரசரிடம் வந்து, ”இச்செத்த நாய் என் தலைவராம் அரசரைப் பழிப்பதா? இதோ நான் சென்று அவனது தலையைக் கொய்து எறிய எனக்கு அனுமதிதாரும்” என்றான். அதற்கு அரசர் செருயாவின் மக்களே! இதைப்பற்றி நீங்கள் கவலைக் கொள்ள வேண்டாம். அவன் பழிக்கட்டும்! ஒரு வேளை தாவீதைப் பழி! என்று ஆண்டவரே அவனுக்குச் சொல்லியிருந்தால், இவ்வாறு நீ ஏன் செய்தாய்? என்று யார் சொல்ல முடியும் என்றார். மீண்டும் தாவீது அபிசாயிடம் தம் பணியாளர் அனைவரிடமும் கூறியது இதோ எனக்கு பிறந்த என் மகனே என் உயிரைப் பறிக்கத் தேடுகிறான். பென்யமின் குலத்தைச் சார்ந்த இவன் செய்யலாகாதோ? அவனை விட்டுவிடு! அவன் பழிக்கட்டும்! ஏனெனில் ஆண்டவரே அவனைத் தூண்டியுள்ளார். ஒருவேளை ஆண்டவர் என் துயரத்தை காண்பார். இன்று அவன் பழித்து பேசியதற்காக எனக்கு அவர் நன்மை செய்வார். தாவீது தன் ஆள்களோடு பயணத்தை தொடர்ந்தார். சிமயி அவருக்கு எதிராகப் பழித்துரைத்து கல்லெறிந்து, புழுதியை வாரித் தூற்றிக் கொண்டு மலையோரமாகச் சென்றான்.

**பதில்பாடல் :** ஆண்டவரே எழுந்தருளும். என்னை மீட்டருளும்

## நற்செய்தி : மாற்கு 5 : 1 - 20

அக்காலத்தில் இயேசுவும் அவரது சீடர்களும் ஒருமுறை கடலுக்கு அக்கரையிலிருந்த கெரசேனர் பகுதிக்கு வந்தார்கள். இயேசு படகைவிட்டு இறங்கிய உடனே தீய ஆவி பிடித்த ஒருவர் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிரே வந்தார். கல்லறைகளே அம்மனிதரின் உறைவிடம். அவரை எவராலும் ஒருபொழுதும் சங்கிலியால் கூடக் கட்டிவைக்க முடியவில்லை. ஏனெனில், அவரைப் பலமுறை விலங்குகளாலும் சங்கிலிகளாலும் கட்டியிருந்தும் அவர் சங்கிலிகளை உடைத்து விலங்குகளைத் தகர்த்து எறிந்தார். எவராலும் அவரை அடக்க இயலவில்லை. அவர் இரவு பகலாய் எந்நேரமும் கல்லறைகளிலும் மலைகளிலும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார் தம்மையே கற்களால் காயப்படுத்தி வந்தார். அவர் தொலையிலிருந்து இயேசுவைக் கண்டு ஓடிவந்து அவரைப் பணிந்து, ”இயேசுவே, உன்னத கடவுளின் மகனே, உமக்கு இங்கு என்ன வேலை? கடவுள் மேல் ஆணை! என்னை வதைக்க வேண்டாம்” என்று உரத்த குரலில் கத்தினார். ஏனெனில் இயேசு அவரிடம், ”தீய ஆவியே, இந்த மனிதரை விட்டுப் போ” என்று சொல்லியிருந்தார். அவரஅம்மனிதரிடம், ”உம் பெயர் என்ன?” என்று கேட்க அவர், ”என் பெயர் ”இலேகியோன்”, ஏனெனில் நாங்கள் பலர்” என்று சொல்லி, அந்தப் பகுதியிலிருந்து தங்களை அனுப்பிவிட வேண்டாமென்று அவரை வருந்தி வேண்டினார். அங்கே மலைப்பகுதியில் பன்றிகள் பெருங் கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன. ”நாங்கள் அப்பன்றிகளுக்குள் புகும்படி எங்களை அங்கே அனுப்பிவிடும்” என்று தீய ஆவிகள் அவரை வேண்டின. அவரும் அவற்றுக்கு அனுமதி கொடுத்தார். பின் தீய ஆவிகள் வெளியேறிப் பன்றிகளுக்குள் புகுந்தன. ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகள் அடங்கிய அந்தக் கூட்டம் செங்குத்துப் பாறையிலிருந்து கடலில் பாய்ந்து வீழ்ந்து மூழ்கியது. பன்றிகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்களோ ஓடிப்போய் நகரிலும் நாட்டுப்புறத்திலும் இதை அறிவித்தார்கள். நடந்தது என்னவென்று பார்க்க மக்கள் வந்தனர். அவர்கள் இயேசுவிடம் வந்தபோது, பேய் பிடித்திருந்தவர், அதாவது இலேகியோன் பிடித்திருந்த அவர், ஆடையணிந்து அறிவுத் தெளிவுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு அச்சமுற்றார்கள். நடந்ததைப் பார்த்தவர்கள் பேய் பிடித்தவருக்கும் பன்றிகளுக்கும் நேரிட்டதை அவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் பகுதியை விட்டுப் போய்விடுமாறு இயேசுவை வேண்டிக்கொண்டார்கள். அவர் படகில் ஏறியதும் பேய் பிடித்திருந்தவர் தாமும் அவரோடு கூட இருக்க வேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டார். ஆனால் அவர் அதற்கு இசையாமல், அவரைப் பார்த்து, ”உமது வீட்டிற்குப் போய் ஆண்டவர் உம்மீது இரக்கங் கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்” என்றார். அவர் சென்று, இயேசு தமக்குச் செய்ததையெல்லாம் தெக்கப்பொலி நாட்டில் அறிவித்து வந்தார். அனைவரும் வியப்புற்றனர்.

**தியானம் :** எமது வாழ்க்கையில் ஏமாற்றங்கள், தோல்விகள், பழிச்சொற்கள் எவ்வாறான கெட்ட நிகழ்வுகள், நோய்கள் வேதனைகள் எதுவாக இருந்தாலும் கூட ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து எங்கள் கூடவே இருக்கின்றார், எங்களை அவர் வழிநடத்துவார். கலங்காமல் திகையாமல் அவர் எமக்கு யாவற்றையும் நன்மைக்கே செய்கிறார் என்று நம்பி வாழவேண்டும் என்று இன்றைய வாசகங்கள் தெளிவபடுத்து கின்றது. அன்று தாவீது அரசன் பலவகையான துன்பங்கள் பட்டாலும் கூட, பழிச்சொற்களை கேட்டுக்கொண்டாலும் கூட “நீ சிந்திய இரத்தம் சவுல் வீட்டாரின் இரத்தப்பழி.......இரத்த வெறியனான நீ உண்மையிலே அழிவாய்” (2சாமு.15:8). யாவும் இறைவனின் சித்தத்தின் நிமித்தம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று ஏற்றுக்கொள்கின்றார். அவர் என் கண்ணீரைக் காண்பார், அவர் எனக்கு நன்மை செய்வார் என்று தான் இறைவன் மேல் கொண்டுள்ள நம்பிக்கையை தன்னுடன் வந்தவர்களுக்கு அவர் வெளிப்படுத்துகின்றார். ஆனால் இவ்வாறான நம்பிக்கையானது எம்மத்தியில் அறவே காணப்படுவதில்லை. மாறாக அவர்களை எதிர்த்து பதிலுக்கு தேவையற்ற கூடாத பேச்சுக்களாலும், சட்டைசச்சரவு செய்தும் ஊரையே ஒன்றுகூட்டி எங்களையே அவமானப்படுத்திக் கொள்கின்றோம். ஆனால் இயேசுவோ நாங்கள் அன்பு, நம்பிக்கை, இரக்கம் கொண்டு வாழவேண்டுமென்று விரும்பகின்றார். நற்செய்தியிலும் கூட தீய ஆவி பிடித்தவர்களை இயேசு பன்றிக்கூட்டத்தினுள் அதிகாரத்தாதோடு கட்டளையிட்டு துரத்தி தனது வல்லமையை வெளிப்படுத்துகின்றார். “தீய ஆவியே இந்த மனிதரை விட்டு போ” (மாற்.5:8). இவ்வாறு தான் செய்த செயலை உலகுக்கு வெளிப்படும்படியாக அவர் குணம்பெற்றவரிடம் கூறுவதை (மாற் 5:19)ல் கூறுவதைப் பர்க்கின்றோம். ஆம் இன்றும் கூட இறைமகன் எங்களது கஸ்டங்கள், துன்பங்கள், பழிச்சொற்கள் யாவற்றையும் ஏற்றுக் கொண்டு எங்களை வழிநடத்தி வருகின்றார் ஆனால் நாங்களோ அதை உணராமல், நன்றி சொல்லாமல் ஏனோதானோ என்று வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எனவே இனிவரும் காலங்களில் அவ்வாறாக வாழாமல் அன்று தாவீது அரசன் எவ்வாறாக யாவற்றையும் ஏற்றுக்கொண்டாரோ அதேபோன்று நாங்களும் யாவற்றையும் ஏற்றுக்கொண்டவர்களாக இயேசுவில் நம்பிக்கை கொண்டு வாழ்வோம்.